# சுபீட்சம் பத்திரிகையை
# வாசித்து விட்டீர்களா?
## பிரதிகளுக்கு முந்துங்கள்...



# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

வெள்ளிக்கிழமை 19.02.2021 | supeedsam.com | supeedsam@gmail.com







# கிழக்கில் கொரோனா மரணத்துடன் போட்டி போடும் டெங்கு



## நேற்றும் சிறுமி பரிதாபச் சாவு

( வேதாந்தி )

கிழக்கு மாகாணத்தில் மேலும் ஒரு டெங்கு மரணம் நேற்று பதிவாகியுள்ளது. குறிப்பிட்ட மரணத்துடன் கடந்த ஆறுவாரங்களுக்குள் இறந்தவர்களின் எண்ணிக்கை 02ஆக அதிகரித்துள்ளது.

நேற்று மரணமடைந்தவர் திருமலைகிண்ணியா பெண்கள் மகளிர் கல்லூரியில் கல்வி பயிலும் கிஷோர் ஷம்ஹா மரியம் எனும் எழுவயது சிறுமி என தெரிவிக்கப்படுகின்றது.

02 ஆம் பக்கத்தில்...

## என்ன நடக்கிறது, அடிபடப்போவது, அழியப் போவது யார் என்று சிந்தித்துப் பாருங்கள்

### பாராளுமன்ற உறுப்பினர் சி.சந்திரகாந்தன்



( சஞ்சயன் )

என்ன நடக்கிறது, அடிபடப்போவது, அழியப் போவது யார் என்று சிந்தித்துப் பாருங்கள் என பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

வாக்களித்த பட்டிருப்புத் தொகுதியிலுள்ள பலாச்சோலை மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றபோது கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையைத் தனது கட்டுப்பாட்டில் வைக்க வேண்டும் என்று வடக்கு கிழக்கு இளைஞர்களுக்கு இந்தியரசு அன்றுஆயுதப் பயிற்சி கொடுத்தது. இன்று கிழக்கு

02 ஆம் பக்கத்தில்...

## திருமலையில் இன்று சுபீட்சம் வெளியீட்டு நிகழ்வு




சுபீட்சம் பத்திரிகையின் திருகோணமலை மாவட்டத்திற்கான வெளியீட்டு நிகழ்வு இன்று பிற்பகல் 04.30 மணிக்கு திருகோணமலை நகரசபை மண்டபத்தில் சிரேஸ்ட ஊடகவியலாளர் பொன் சற்சிவானந்தம் தலைமையில் நடைபெறவுள்ளது.

முதற்பிரதியை திருகோணமலை நகர சபைத் தலைவர் நா.இராசநாயகம் பெறவுள்ளதுடன், ஆய்வுரையை சிரேஸ்ட ஊடகவியலாளர் திருமலைநவம் நிகழ்த்தவுள்ளார்.

தனபாலசிங்கம் உட்பட பல்வேறு அதிதிகள் கருத்துரை வழங்கவுள்ளதுடன், நன்றியுரையினை பொறியியலாளர் கதிர் திருச்செல்வம் நிகழ்த்தவுள்ளார்.

## கிழக்கில் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து செல்வது எதிர்காலத்தில் பாரிய சவாலாக அமையும்

### பாராளுமன்ற உறுப்பினர் த. கலையரசன்



கிழக்கு மாகாணத்தில் தமிழ்மாணவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்த அளவில் காணப்படுகின்றமை எதிர்காலத்தில் எமக்குப் பாரிய சவாலாக அமையும் எனபாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

நேற்றைய தினம் திருக்கோவில் கண்ணகிபுரம், கண்ணகி வித்தியாலயத்தில் க.பொ.த உயர்தர கலைப்பிரிவு ஆரம்பிக்கும் நிகழ்வில் அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

மாணவர் சமூகம் என்பது எமது வளங்களை நிர்ணயிக்கின்ற சக்திகளுள் ஒன்றாகத்

02 ஆம் பக்கத்தில்...

## கிண்ணியாவில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேருக்கு கொரோனா தொற்று

(எப்.முபாரக்)

குறிஞ்சாக்கேணி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவுக்குட்பட்ட நடுஊற்று கிராம சேவகர் பிரிவில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேர் கொரோனா தொற்றாளராக இனங்காணப்பட்டுள்ளனர் என குறிஞ்சாக்கேணி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எம்.எம்..அஜித் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்: கிண்ணியா நடுஊற்று கிராம

02 ஆம் பக்கத்தில்...

## நொச்சிமுனை பகுதி கிராம சேவையாளரை உடன் இடமாற்றம் செய்யுமாறு கோரி அப்பகுதி மக்கள் ஆர்ப்பாட்டம்





மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட நொச்சிமுனை கிராம சேவையாளர் பிரிவில் கடந்த மூன்று வருடங்களாக

02 ஆம் பக்கத்தில்...

## யாழ். இந்திய துணைத்தூதுவர் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு விஜயம்!



ச.தவசீலன்

யாழ் இந்திய துணைத்தூதுவர் எஸ்.பாலச்சந்திரன் நேற்று மாலை 4.15மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு

02 ஆம் பக்கத்தில்...

## வாழைச்சேனையில் இரத்ததான முகாம்



(அனுருத்தன்)

மட்டக்களப்பு கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச செயலகத்தின் சமூர்த்தி பிரிவினால் 'உங்கள் உறவுகளின

02 ஆம் பக்கத்தில்...

## ஏறாவூர் நகர சபையின் வரவு - செலவுத் திட்டம் எதிர்ப்பின்றி நிறைவேற்றம்





(ரக்ஸனா)

ஏறாவூர் நகர சபையின் புதிய தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட 2021ஆம் ஆண்டுக்கான சுமார் 13 கோடி 41 இலட்சம் ரூபாவுக்குரிய வரவு செலவுத் திட்டம் எதிர்ப்பின்றி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதாக நகர சபைச் செயலாளர் தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...

## மன்னாரிலிருந்து மீன் பிடிக்காகச் சென்ற மூவரில் ஒருவர் உயிர் தப்பிய நிலையில் மாலைதீவில்

( வாஸ் கூஞ்ஞ)

மன்னாரிலிருந்து மீன் பிடிக்காக ஒரு படகில் சென்று காணாமல் போனதாக தேடப்பட்டு வந்த மூன்று மீனவர்களில் ஒருவர் உயிருடன் மாலைதீவில் அடைந்திருப்பதாக தகவல் கிடைக்கப்பெற்றதைத் தொடர்ந்து இவ் செய்தியை உறுதிப்படுத்தி அதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதற்காக மன்னார் கடற்தொழில் திணைக்களம்

02 ஆம் பக்கத்தில்...










# திருமலையில் மூன்று இடங்களில் நான்கு பவுன் தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்ற நபர் ஒருவர் விளக்கமறியலில்

( எப்.முபாரக்)

திருகோணமலையில் மூன்று இடங்களில் நான்கு பவுன் தங்கச் சங்கீலியை அறுத்துச் சென்ற நபர் ஒருவரை இம்மாதம் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற நீதிவான் சமிலா குமாரி ரத்நாயக்க நேற்று உத்தரவிட்டார்.

கூம்புகார் வீதி,பாலையூற்று பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய ஒருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் திருகோணமலை நகரம் ,திருகோணமலை மூன்றாம் கட்டை மற்றும் பாலையூற்று போன்ற மூன்று இடங்களில் நான்கு பவுன் தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளதாகவும் அப்பகுதிகளில் பொறுத்தப்பட்டுள்ள சீசீடிவீ கானொலிகளை கொண்டு சந்தேக நபரை கைது செய்ததாக திருகோணமலை தலைமையக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வீதியால் அல்லது கடைக்கு தனியாக செல்லுகின்ற வயதான பெண்களின் தங்கச்சங்கியை இவ்வாறு அறுத்துச்சென்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபரை பொலிஸார் திருகோணமலை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போதே விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# மட்டக்களப்பு மாநகர சபையினால் மஞ்சந்தொடுவாய் பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை







மட்டக்களப்பு மாநகரமானது டெங்கு நோய் பரவும் இடங்களில் ஒன்றாக அடையாளப்பட்டதனை தொடர்ந்து மட்டக்களப்பு மாநகர சபையினால் சுட்டிக்காட்டப்பட்ட பிரதேசங்களில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன்படி மட்டக்களப்பு மாநகர ஆணையாளர் மாணிக்கவாசகர் தயாபரன் தலைமையில் மஞ்சந்தொடுவாய் பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

கொரோனா அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகரித்துவரும் டெங்கின் தாக்கத்தினை கட்டுப்படுத்தும் வகையில் இந்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

குறிப்பாக நீர் தேங்கி நிற்கக் கூடிய வடிகான்கள், கிணறுகள், வெற்றுக் காணிகள் என்பன மாநகர சபையின் ஊழியர்களாலும், கனரக வாகனங்களினாலும் துப்பரவு செய்யப்பட்டதுடன் இது தொடர்பில் பொதுமக்களுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

மேற்படி டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் மட்டக்களப்பு மாநகர சபையின் பொறியியலாளர் சித்திராதேவி லிங்கேஸ்வரன், மாநகர சபை உறுப்பினர் முகமட் நிஃப்ளார், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜூட் செல்லா ராஜரெட்ணம், அபிவிருத்தி உத்தியோகத்தர் ஷில்மி, மஞ்சந்தொடுவாய் பெண்கள் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவி றிபாயா உட்பட பிரதேச இளைஞர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## மன்னாரிலிருந்து மீன் பிடிக்காகச் சென்ற...

நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ் சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது; கடந்த 30.01.2021 மன்னார் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கொண்ணையான் குடியிருப்பு கிராமத்தைச் சேர்ந்த மூன்று மீனவர்கள் கண்ணன் (வயது 53), பாண்டியன் (வயது 23) செபஸ்ரியான் கொட்வின் (வயது 31) ஆகிய மூவரும் ஒரு படகில் வழமை போன்று மன்னார் தென்கடல் பரப்பில் தூண்டில் மூலம் மீன்பிடிக்காக ஓலைத்தொடுவாய் துறைமுகத்திலிருந்து புறப்பட்டு சென்று இருந்தனர்.

இவர்கள் அடுத்த தினம் ஞாயிற்றுக் கிழமை 31.01.2021 அன்று கரையிலிருந்த உறவினர்களிடம் படகில் எரிபொருள் தீர்ந்து விட்டதாகவும் தாங்கள் படகிலிருந்த நங்கூரம் கடலில் போட்டும் அவை அறுந்து விட்டதால் படகு வலிந்து செல்வதாகவும் தொலை தொடர்பு மூலம் தகவல் பரிமாரியதாக தெரிவிக்கப்பட்டு இருந்தது.

இந்த நிலையில் இவ் மீனவர்கள் தேடப்பட்டு இவர்கள் தொடர்பாக தகவல் பெறுவதில் 16 தினங்களாக பல தரப்பாலும் முயற்சிகள் மேற்கொண்டு வந்த நிலையில் தற்பொழுது கண்ணன் (வயது 53) என்பவர் உயிருடன் படகுடன் மாலைதீவு பகுதியில் சேர்ந்திருப்பதாகவும் அவர் தற்பொழுது மாலைதீவு பகுதியிலுள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் உயிர் தப்பியவர் தங்கள் உறவினர்களுக்கு தெரிவித்தாக தெரிவிக்கப்படுகின்றது.

படகில் இவருடன் சென்ற ஒருவர் கரை சேரும் முயற்சியில் மண்ணெண்யை ரேங்குடன் கடலில் பாய்ந்து நீந்தி கரை சேர முற்பட்டதாகவும் மற்றையவர் பசியின் கொடுமையால் இறந்த நிலைக்கு உள்ளாகியதாகவும் உயிர் தப்பிய மீனவர் மாலைத்திவிலிருந்து தகவல் தெரிவித்ததா தெரிவிக்கப்படுகின்றது

இவ் சம்பவம் மன்னார் கடற்தொழில் திணைக்களப் பகுதிக்கு தகவல் கிடைக்கப் பெற்றதைத் தொடர்ந்து உத்தியோக பூர்வமான தகவலை பெற்று மேலதிக நடவடிக்கைக்காக மன்னார் மாவட்ட கடற்தொழில் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருவதாக இவ் வட்டாரம் தெரிவிக்கின்றது.

## ஏறாவூர் நகர சபையின் வரவு - செலவுத் திட்டம் எதிர்ப்பின்றி...

அச்சபையின் விசேட சபைக் கூட்டம் வியாழக்கிழமை 18.02.2021 புதிய நகர சபைத்தலைவர் எம்.எஸ். நழீம் தலைமையில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் ஏறாவூர் நகர சபையின் மொத்தமுள்ள அனைத்துக் கட்சி உறுப்பினர்களில் 13 பேர் கலந்து கொண்டிருந்தனர்.

ஏறாவூர் சபையின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் இதற்கு முன்னர் முன்னர் இரு தடவைகள் சமர்ப்பிக்கப்பட்ட பொழுது அது அந்நகரசபையின் 11 உறுப்பினர்களால் இரு தடவையும் நிராகரிக்கப்பட்டிருந்ததன் காரணமாக அப்போதிருந்த நகர சபைத் தலைவரின் பதவி வறிதாக்கப்பட்டதாக கிழக்கு மாகாண ஆளுநரால் பிரகடனப் படுத்தப்பட்டிருந்தது.

அதனையடுத்து கடந்த 11.02.2021 அன்று கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என். மணிவண்ணன் தலைமையில் தவிசாளர் தெரிவு நடைபெற்றது. அதில் புதிய தவிசாளராக எம்.எஸ் நழீம் தெரிவு செய்யப்பட்டார். முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினரான இவரது தெரிவிற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகள் ஆதரவளித்திருந்தன.

புதிய தவிசாளர் நழீம் தனது கன்னியமர்வில் ஏறாவூர் நகர சபையினால் வழங்கப்படும் கொடுப்பனவுகள் சலுகைகள் எதனையும் சுயதேவைக்காகபெற்றுக்கொள்ள மாட்டேன் என்றும் நகர சபையின் வாகனங்களைப் பயன்படுத்தவே மாட்டேன் என்றும் சத்தியம் செய்ததுடன் இப்பிரதேசத்திற்கு எந்தவொரு கட்சி சார்ந்த அரசியல்வாதிகளினால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திட்டங்களுக்கும் பூரண ஆதரவும் அனுசரணையும் ஒத்துழைப்பும் வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

## வாழைச்சேனையில் இரத்ததான முகாம்...

உயிர்களை காக்க குருதி தானம் தருக' என்ற தொணிப் பொருளில் இரத்த தான முகாம் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பிரதேச செயலாளர் கே.தனபாலசுந்தரம் தலைமையில் பிரதேசத்தின் நலன் விரும்பிகள் குருதி நன்கொடையாளிகள் மற்றும் சமூர்த்தி பயனாளிகள் இவ் குருதி வழங்களில் பங்குகொண்டனர்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை வைத்தியர் எம்.துஷ்யந்தன் குருதி வழங்கல் வைத்திய சேவை நடவடிக்கையினை மேற்கொண்டார்.

குறிப்பாக் ஒரு நாளைக்கு சாதரணமாக 35 பொயின்ட் அளவு குருதி தேவைப்படுவதாகவும் மகற் பேற்றாளர்கள், புற்றுநோயாளர்கள், விபத்தில் சிக்கியவர்கள், குழந்தைகளுக்கு ஏற்படும் தளசீமிய எனப்படும் நோய், மற்றும் குருதி சோகை போன்ற நோய்களுக்கு குருதி அதிகம் தேவைப்படுவதாகவும் பொதுமக்கள் இரத்த தானம் வழங்க முன்வரவேண்டும் என வைத்தியர் எம்.துஷ்யந்தன் கேட்டுக்கொண்டார்.

கிறிஸ்தவ தேவாலயம், பன்சாலை மற்றும் பிரதேச செயலகங்களிலே இரத்த தானம் வழங்க அதிகம் பேர் ஆர்வம் செலுத்தி வருவதாகவும் அவர்களே இவ்வாறான எற்பாடுகளுக்கு முக்கியத்துவம் வழங்குவதாகவும் அவர் மேலும் கருத்து தெரிவித்தார்.

## நொச்சிமுனை பகுதி கிராம சேவையாளரை உடன் இடமாற்றம்...

கிராம சேவையாளராக கடமையாற்றி வரும் கிராம சேவை உத்தியோகத்தரை உடன் இடமாற்றம் செய்யுமாறு கோரி அப்பகுதி பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றினை நேற்று நொச்சிமுனை கிராம சேவையாளர் அலுவலகத்திற்கு முன்னாள் மேற்கொண்டனர் .

ஆர்ப்பாட்டத்தின் போது பொதுமக்களை அவமதிக்கும் அதிகாரி வேண்டாம், அரச காணியை பணத்திற்கு விற்கும் ஜீ.எஸ். வேண்டாம், பொதுமக்களுக்கு சேவை செய்யாத அதிகாரி எமக்கு தேவையில்லை, அனைத்து ஜீ.எஸ். களுக்கும் இடமாற்றம் ஆனால் இவருக்கு மட்டும் இடமாற்றம் இல்லையாம், பெண்களை மதிக்காத கிராம சேவகர் எமக்கு வேண்டாம், போன்ற வாசகங்கள் கொண்ட சுலோகங்கள் எந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் போது குறித்த ஆர்பாட்டம் இடம் பெற்ற இடத்திற்கு வருகை தந்த மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வி .வாசுதேவன், உதவி திட்டமிடல் பணிப்பாளர் எ. சுதர்சன் ஆகியோருடன் ஆர்ப்பாட்ட காரர்கள் கலந்துரையாடியதுடன், மாவட்ட அரசாங்க அதிபருக்கு கையளிக்கும் வகையில் மகஜர் ஒன்றினையும் பிரதேச செயலாளரிடம் கையளித்தனர்.

## யாழ். இந்திய துணைத்தூதுவர் முல்லைத்தீவு...

விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

மாவட்ட செயலகத்தில் வைத்து மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் மற்றும் திட்டமிடல் பணிப்பாளர் ஷ.கிருபாசுதன் ஆகியோர் வரவேற்றதைத் தொடர்ந்து நட்பு ரீதியான கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தார்.

மேலும் இச் சந்திப்பின் போது இந்திய அரசாங்கத்தினால் வடபகுதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பிலும் எதிர்காலத்தில் முன்னேற்றத்தினை நோக்கி பயணிப்பதற்கு வேண்டிய வழிமுறைகள் தொடர்பிலும் கலந்துரையா

## கிழக்கில் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து செல்வது...

திகழ்கின்றது. எமது சமூகத்தைப் பொறுத்தவரையில், கல்வியும், விவசாயமும் வீழ்ச்சியடைந்து போவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. தற்காலத்தில் கிழக்கு மாகாணத்தில் எமது மாணவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்த அளவிலேயே காணப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இந்த விடயம் எதிர்காலத்தில் எமக்குப் பாரிய சவாலாக அமையும். ஏனெனில் வளங்கள் பகிர்ந்தளிக்கப்படுகின்ற பொழுது அந்த மாணவர் தொகை பார்க்கப்படுகின்றது. அதன் காரணமாக எமக்குக் கிடைக்கப்படுகின்ற வளங்களும் குறையும் சந்தர்ப்பம் இருக்கின்றது

எமது வடக்கு கிழக்கில் ஏற்படுத்தப்பட்ட யுத்தத்தினால் பொருளாதார ரீதியாக மாத்திரமல்ல, அரசியல் மற்றும் இன ரீதியான விகிதாரசாரத்திலும் மிகவும் பின்நோக்கிய ஒரு நிலையிலேயே எமது தமிழ் சமூகம் சென்றுள்ளது. இந்த நாட்டிலே வடக்கு கிழக்கு பிரதேசங்களிலே நாங்கள் எமது இருப்புக்காகப் போராடி இன்று எமது இனரீதியான விகிதாசாரம் மிகவும் குறைக்கப்பட்ட ஒரு நிலைமையில் நிற்கின்றோம். தற்போது இருக்கின்ற எமது பொருளாதாரம் ஒரு பிரச்சினையாக இருந்தாலும் எமது மக்கள் அந்த விடயத்திலே அக்கறையுடன் செயற்பட வேண்டும். எதிர்காலத்திலே நாங்கள் எமது பிரதேசங்களில் நிலையாக வாழ வேண்டும் என்றால் எமது அரசியல், கல்வி, பொருளாதாரம், அபிவிருத்தி என்ற ரீதியில் நாங்கள் முன்நோக்கிப் போக வேண்டியவர்களாக இருக்கின்றொம்.

அத்துடன், கல்வி ரீதியில் உயர் பதவிகளில் இருப்பவர், அரசியலாளர்கள் அனைவரும் ஒன்றிணைந்து எமது சமூக ரீதியான திட்டமிடலை மேற்கொள்ள வேண்டும். இல்லையென்றால் எமது நிலைமை இன்னும் மோசமாகி விடும்.

கிழக்கு மாகாணத்திலே தமிழர்கள் கல்வி நிலையில் முன்னேற்றம் கண்டுள்ளார்கள் என்ற காரணத்தினால் சமப்படுத்தல் என்ற விடயத்தைக் கொண்டு வந்தார்கள். 2015ம் ஆண்டுக்கு முன்னர் இந்த விடயத்தினால் மிகப் பாரிய அனர்த்தம் ஏற்படுத்தப்பட்டது. அதனை நாங்கள் அப்போது தட்டிக் கேட்டோம். அவ்வாறு தட்டிக் கேட்ட போது மாகாணசபையைக் கூட நடத்தாமல் இழுத்து மூடிய வரலாறுகளும் உண்டு. எனவே நாங்கள் எமது சமூகத்தின் விடயங்கள் தொடர்பில் மிகவும் நிதானமாக ஜனநாயக ரீதியில் போராட வேண்டிய நிலைப்பாடு காணப்படுகின்றது.

இந்த நாட்டின் பெரும்பான்மை சிங்கள அரசு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை எதிரிகளாகவே பார்க்கின்றார்கள். நாங்கள் எங்கள் மக்களின் ஜனநாயக உரிமையைக் கேட்கும் போது. அவர்கள் எங்களை வித்தியாசமான முறையிலே கையாளுகின்றார்கள் என்றார்.

## கிண்ணியாவில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த...

சேவகர் பிரிவில் உள்ள ஒரு குடும்பஸ்தர், வெளிநாடு செல்லுவதற்காக கொழும்பில் பிசிஆர் மருத்துவ பரிசோதனை செய்யப்பட்ட போது இவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டதாக எமக்கு அறிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அவரது முதன் நிலை தொடர்பாளர்களை அன்டிஜென் பரிசோதனைக்கு உட்படுத்திய போது, மேலும் 5 பேர் கொரோனா தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர் என்று தெரிவித்தார். இந்த குடும்பத்தைச் சேர்ந்த மகாமாறு அலிகார் மகா வித்தியாலயத்தில் உயர்தரப் பிரிவில் கல்வி பயிலும் மாணவி ஒருவருக்கு நேற்று தொற்று உறுதிப்படுத்தப்பட்டது என்றும் தெரிவித்த அவர், குறிஞ்சாக்கேணி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் இலங்கையில் பெஹலியகொட மீன் சந்தையில் இருந்து ஆரம்பித்த, 2 வது கொரோனா அலைக்குப் பின்னர் இந்த பிரதேசத்தில் கொரோனா தொற்றாளர்களர்களின் எண்ணிக்கை 17 ஆக உயர்வடைந்துள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

குறிப்பிட்ட தொற்றுடன் திருகோணமலையில் 533பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளதுடன் ,இவர்களில் பலர் குணமடைந்து இயல்பு வாழ்க்கைக்கு திரும்பியுள்ளனர்.

## என்ன நடக்கிறது, அழிபடப்போவது, அழியப் போவது யார் என்று...

முனையப்பிரச்சினை, கிழக்கு மாகாண நிலைமைகளை ஆராய்கிறோம் என பிள்ளையானுடனும் கருணாஅம்மானுடனும் சந்திப்பு பொத்துவில் தொடக்கம் பொலிகண்டிவரையிலான போராட்டம் இவைகளை நினைத்துப்பாருங்கள்.

பொத்துவில் பொலிகண்டிப்போராட்டத்தை பொத்துவிலில் வைத்தேஅடித்துத் தடுக்க வேண்டும் என்று முனைப்பு காட்டிய அரசு அதனை விட்டுவிட்டது ஏன் என நாம் சிந்திக்கவேண்டும்.

கிழக்கிலே தமிழர்களும் முஸ்லிம்களும் ஒன்றாக இணைந்திருக்கின்றார்கள் என்ற தோற்றத்தை வெளிப்படுத்தி பெருந்தேசிய பௌத்த சிந்தனையாளர்களை தொடர்ந்தும் திருப்திப்படுத்துவதற்காகவும் உலகப் பொருளாதாரத்தை விஸ்தரிக்கவுமே அரசு போராட்டத்தை தடுக்கும் நோக்கத்தை கைவிட்டது. தேசிய அரசாங்கத்தை கையாளும் எந்தத் தலைவர்களும் பௌத்த தேசியவாதிகளையேமுதலில் திருப்திப்படுத்த முனைவார்கள். ஆகையினால் மக்களுடைய தேவைகள், எதிர்காலம் சார்ந்து மிகக் கவனமாக சிந்திக்க வேண்டிய பொறுப்பு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சிக்கு இருக்கிறது.

2016, 2017 காலப்பகுதியில் கிடைக்கப்பெற்ற தொல்பொருள் தரவுகளே மட்டக்களப்பிலே 1000, க்கும் அதிகமான தடயங்கள் இருக்கிறதென்ற தகவலைக்கொடுத்தது. அந்த அடிப்படையிலே 201%, காலத்திலே ஏழு விகாரைகள் கட்டப்பட வேண்டுமென்ற தீர்மானமும் எடுக்கப்பட்டது. இந்த விடயம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு தெரிந்தும் கண்டு கொள்ளவில்லை.

இப்பொழுது பௌத்த தேசிய வாதத்தை மையப்படுத்திய அரசாங்கம், நல்லாட்சியில் எடுத்த தரவுகளை அடிப்படையாக வைத்து சிங்கள மக்களை திருப்திப்படுத்த விழைகிறார்கள் என்பதே உண்மை என்றார்.

## கிழக்கில் கொரோனா மரணத்துடன் போட்டிப்....

கடந்த ஜனவரிமாதம் வாழைச்சேனைசுகாதாரப்பிரிவில் டெங்கு காய்ச்சலினால் ஒருவர் மரணமடைந்த நிலையில் நேற்றும் ஒரு மரணம் ஏற்பட்டுள்ளது. காய்ச்சல் காரணமாக திருமலை ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டநிலையிலேயே மரணமடைந்துள்ளார். கடந்த 06வாரங்களுக்குள் கிழக்கு மாகாணத்தில் டெங்கு காய்ச்சலினால் 1530 பேர் பீடிக்கப்பட்டுள்ளனர். மட்டக்களப்பு 1453, திருமலை30 ,கல்முனை45, அம்பாறை 02 என குறிப்பிட்டசுகாதாரப்பிரிவுகளில் பதிவாகியுள்ளதாக மாகாணசுகாதாரத்திணைக்களத்தின் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் ஜனவரி முதலாம் திகதிமுதல் நேற்றுவரை2362பேர் டெங்குகாய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளபோதிலும் இதில் கிழக்குமாகாணத்தில் மட்டும் 1530பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

# உமாமகேஸ்வரன் பவுண்டேசனினால் பின்தங்கிய பிரதேச மாணவர்களுக்கு உதவித் திட்டம் வழங்கி வைப்பு





பின்தங்கிய பிரதேச மாணவர்களின் ஆரம்பக் கல்வி வளர்ச்சியினை ஊக்குவிக்கும் முகமாகவும், அம்மாணவர்கள் மத்தியில் சேமிப்புப் பழக்கத்தை வளப்படுத்தும் நோக்கோடும் உமாமகேஸ்வரன் பவுண்டேசன் அமைப்பினால் பாலர் வகுப்பு மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் சேமிப்பு வைப்புக் கணக்கு ஆரம்பிக்கப்பட்ட சேமிப்புப் புத்தகங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு இன்றைய தினம் வவுணதீவு, காயான்மடு சிவசக்தி பாலர் பாடசாலையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தமிழ்த் தேசிக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாநகரசபை உறுப்பினர் எம்.நிஸ்கானந்தராஜா மற்றும் மேற்படி அமைப்பின் நிருவாகிகளான என்.ராகவன், ஓய்வுபெற்ற அதிபர் க.கிருபைராசா, ஆசிரியர் கா.கமலநாதன், காயான்மடு ஆலயத் தலைவர் விமலநாதன் உட்பட பாலர் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

கனடாவைச் சேர்ந்த அமரர் சுப்பிரமணியம் சீதா ரோஸ்மேரி அவர்களின் முதலாவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு சீதா ரோஸ்மேரி அவர்களின் புதல்வர் சுப்பிரமணியம் ரவீந்திரன் அவர்களின் நிதிப்பங்களிப்பில் உமாமகேஸ்வரன் பவுண்டேசனினூடாக இவ் உதவிச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன்போது தலா ஒரு மாணவருக்கு ரூபா 1500.00 சேமிப்பு செய்யப்பட்ட சேமிப்புப் புத்தகமும், அதனுடன் இணைந்த வகையில் கற்றல் உபகரணமுமாகச் சேர்த்து ரூபா 2600.00 பெறுமதியான உதவித் திட்டம் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ‘சுரகிமு கங்கா’ தேசிய சுற்றாடல் நிகழ்ச்சி திட்டம்




**( ஹஸ்பர் ஏ ஹலீம்)**

சுற்றாடலை பாதுகாக்கும் நாட்டின் திட்டத்துக்கு அமைவாக ‘சுரகிமு கங்கா’ திட்டத்திற்கு அமைவாக பிரதேச சுற்றாடல் குழுவினை அமைக்கும் கூட்டம் புதன்கிழமை தம்பலகாமம் பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் பிரதேச செயலாளர் ஜே.ஸ்ரீபதி தலைமையில் நடைபெற்றது .

சுற்றாடலை பாதுகாக்கவும் மாசடைவதை தடுக்குமுகமாகவும் பல்வேறு விடயங்கள் இங்கு கலந்துரையாடப்பட்டன.

இதில் தம்பலகாமம் பிரதேச செயலகத்தின் உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப், சுகாதார வைத்திய அதிகாரி, பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, வட்டவன அலுவலர், பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர், சகல கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் , தம்பலகாமம் பிரதேச சபை அதிகாரி, என பலரும் கலந்து கொண்டனர்.



**பொன்ஆனந்தம்**

மூதூர் மல்லிகைத்தீவு கிராமத்தில் உழவர் சிலை திறந்துவைக்கப்பட்டது. இது ஒரு வறவேற்பு வாயிலாக உள்ளதுடன் தமது குலத் தொழிலையும் பரம்பரையையும் போற்றும் வகையில் இது அமைக்கப்பட்டுள்ளது.

இதனை மல்லிகைத்தீவு இளைஞர் கள் ஏற்பாடு செய்து உருவாக்கி வைபரீதியாக திறந்து வைத்தனர்.












# அரச பாடசாலைகளுக்கு பெப்.25 முதல் குறுகியகால விடுமுறை

## விடுமுறை காலத்தை எவ்வாறு கழிப்பது? டி.ஐ.ஜி. அறிவுரை





( வி.ரி.சகாதேவராஜா)

நாட்டிலுள்ள அரச பாடசாலைகளுக்கு எதிர்வரும் பெப்.25ஆம் திகதி முதல் மார்ச் 14ஆம் திகதிவரை குறுகியகால(17நாட்கள்) விடுமுறை வழங்கப்படவிருக்கிறது.

இதுபற்றி கல்வியமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா மாகாணபிரதமசெயலாளர்கள் தொடக்கம் அதிபர்கள் வரை சுற்றுநிருபம் மூலம் அறிவித்துள்ளார்.

கொரோனா காரணமாக ஒத்திவைக்கப்பட்ட 2020க்கான க.பொ.த சா.தரப்பரீட்சை நடைபெறவிருப்பதே இவ்விடுமுறைக்கான காரணமென அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த க.பொ.த. சா.தரப்பரீட்சை எதிர்வரும் மார்ச் 1ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதி வரை நடைபெறவிருப்பது தெரிந்ததே.

எனவே பரீட்சைக்காக பெப்.25ஆம் திகதி முதல் விடுமுறை வழங்கப்படும் சகல பாடசாலைகளும் மீண்டும் மார்ச் மாதம் 15ஆம் திகதி திறக்கப்படவுள்ளன. அது சித்திரைவருடப்பிறப்பு விடுமுறைக்காக மீண்டும் ஏப்ரல் மாதம் 9ஆம் திகதி மூடப்படவிருக்கின்றது.

அவ்வாறு மூடப்படும் பாடசாலைகளில் தமிழ்சிங்களப் பாடசாகைள் இரண்டாம் தவணைக்காக ஏப்ரல் 19ஆம் திகதி திறக்கப்படும் அதேவேளை முஸ்லிம் பாடசாலைகள் மே மாதம் 17ஆம் திகதி திறக்கப்படும் என கல்வியமைச்சு சுற்றுநிருபம்மூலம் அறிவித்துள்ளது.

முஸ்லிம்களின் ரமழான் நோன்புக்காக ஏப்ரல் 10ஆம் திகதி முதல் மே 16வரை விடுமுறை வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பாடசாலை விடுமுறை காலத்தில் மிகவும் அவதானமாகவும் சிந்தனையுடனும் செயற்படுமாறு பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண இதை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

இந்த வார இறுதி விடுமுறை நாட்களில் சுற்றுலா வைபவங்கள் மற்றும் பொது மக்கள் ஒன்றுகூடல் போன்ற விடயங்களில் சுகாதாரப் பிரிவினர் வகுத்துள்ள சுகாதார பரிந்துரைகளுக்கமைய செயற்படுமாறும் தெரிவித்தார்.

அத்துடன் எதிர்வரும் 26ஆம் திகதி ஆரம்பமாகின்ற வார இறுதி நீண்ட விடுமுறையில் பின்பற்ற வேண்டிய சுகாதார பரிந்துரைகள் தொடர்பாகவும் சுகாதார அமைச்சின் சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் கருத்து தெரிவித்தார்.

பிரித்தானியாவின் புதிய கொரோனா வைரஸ் பரவுவதை தடுக்கும் நோக்கிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

# பட்டதாரி பயிலுனர்களுக்கான பயிற்சிக் காலம் குறைக்கப்படுமா?

## அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சேவை சங்கம்

(றாசிக் நபாயிஸ், மருதமுனை நிருபர்)

பட்டதாரி பயிலுனர்களுக்கான பயிற்சிக் காலத்தை ஆறு மாதங்களாக குறைத்து பயிற்சி நிறைவில் நிரந்தர நியமனத்திற்குள் உள்வாங்குமாறு கோரி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

2021.02.17 என திகதியிடப்பட்ட கடிதத்தில் இம்மாதம் முதலாம் திகதி சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட பட்டதாரி பயிலுனர்களுக்கான பயிற்சிக் காலத்தை ஆறு மாதங்களுக்கு மட்டுப்படுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, பட்டதாரிகளுக்கு வழங்கப்படும் ஒரு வருட பயிற்சியானது எவ்வித பயனுமற்ற பயிற்சியாகும். அவர்கள் நியமிக்கும் பயிற்சியில் பணியாற்றுவதுடன் பல்வேறு அரச நிறுவனங்களில் பல்வேறு பல்வேறு தரங்களில் அன்றாட பணித் தேவைகளை செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாகியுள்ளனர். இதனால் எதிர்காலத்தில் அவர்களுடைய தொழில் கௌரவம் பாதிக்கப்படுகிறது. அவ்வாற சூழ்நிலை உருவாகாதிருப்பதற்கு பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்ட பின்னர் அவர்களுக்கு வழங்கப்படும் முன் பயிற்சிக் காலத்தில் வழங்கப்படும் பயிற்சியானது போதுமானதாகும்.

இந்தப் பயிற்சிக்காலத்தில் உடல் மற்றும் உளரீதியாக பட்டதாரிகள் பாதிக்கப்படுவதுடன் எதிர்காலத்தில் சிறந்த பொதுச் சேவையை வழங்குவதற்கு இது தடையாக இருக்கும் என்பதையும் சுட்டிக்காட்டி குறிப்பிடப்பட்டுள்ளது.

# மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதியாக எம்.எம்.எம்.மிஹால் பதவியேற்பு

( வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மேல் நீதிமன்றில் கடந்த பதின்மூன்று மாதங்களாக மேல் நீதிமன்ற நீதிபதியாக கடமை புரிந்து வந்த நீதிபதி ஏ.எம்.எம்.சஹாப்தீன் காலி குடியியல் மேன் முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதியாக இடம் மாற்றம் பெற்றுச் சென்றதைத் தொடர்ந்து இவரின் இடத்துக்கு மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதியாக புதிய நியமனம் பெற்று நீதிபதி எம்.எம்.எம்.மிஹால் பதவியேற்றுள்ளார்.

புதன்கிழமை இவர் தனது பதவியை ஏற்க மேல் நீதிமன்றுக்கு வருகை தந்தபொழுது நீதிமன்ற உத்தியோகத்தர்கள் மற்றும் மன்னார் சட்டத்தரனிகள் நீதிமன்ற நுழை வாயிலில் வைத்து சம்பிரதாயபூர்வமாக வரவேற்றனர்.

# விடுமுறை பெறாத ஆசிரியை கௌரவிப்பு



(எச்.எம்.எம்.பர்ஸான்)

சுமார் மூன்று வருடங்களாக விடுமுறை எடுக்காமல் தொடராக பாடசாலைக்கு சமூகமளிக்கும் ஆசிரியை ஒருவரை கௌரவிக்கும் நிகழ்வு புதன்கிழமை இடம்பெற்றது.

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்துக்குட்பட்ட வாழைச்சேனை வை. அஹமட் வித்தியாலயத்தில் கடமையாற்றி வரும் எம்.ஏ.எப்.தஸ்லீமா எனும் ஆசிரியை ஒருவரே இவ்வாறு பாடசாலை அதிபர் காரியாலயத்தில் வைத்து நினைவுப் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இவர் சுமார் மூன்று வருடங்களாக எவ்வித விடுமுறையும் பெறாமல் தொடராக பாடசாலைக்கு வந்து கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபடுகிறார்.

அத்தோடு, அதிபரினால் வழங்கப்படும் வேலைகளை பாடசாலை நலன்கருதி சிறப்பாக செய்துவருகிறார் எனவும் பாடசாலையின் அதிபர் என்.எம்.ஹஸ்ஸாலி தெரிவித்தார்.

இவ்வாறு விடுமுறை பெறாமல் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு சேவையாற்றி வரும் ஆசிரியை எம்.ஏ.எப். தஸ்லீமாவுக்கு பாடசாலை நிர்வாகம் சார்பாக தனது பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன் என்று அதிபர் என்.எம். ஹஸ்ஸாலி தெரிவித்தார்.

# மன்னார் கிராம அலுவலரின் கொலை வழக்கில் சந்தேக நபர் தொடர்ந்து விளக்கமறியலில்



( வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாந்தை மேற்கு பகுதியின் கிராம அலுவலகரின் கொலை வழக்கில் சந்தேக நபர் தொடர்ந்து விளக்கமறியலில். வைக்க நீதவான் மாணிக்கவாசகர் கணேசராஜா கட்டளைப் பிறப்பித்தார். பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்ட தடயப் பொருட்களின் அறிக்கையை மன்றுக்கு விரவில் சமர்பிக்க கட்டளைபிறப்பிக்குமாறு சந்தேக நபர் சார்பாக மன்றில் முன்னிலையாகியிருந்த சட்டத்தரனி எஸ்.டினேஸ் மன்றில் தனது விண்ணப்பத்தை முன்வைத்தார்.

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தின் கிராம அலுவலகர்களுக்கான பதில் நிர்வாக உத்தியோகத்தராகவும் இலுப்பைக்கடவை கிராம அலுவலகராகவும் கடமையாற்றிக் கொண்டிருந்த வேளையில் எஸ்.விஜேயேந்திரன் (வயது 55) என்பவர் கடந்த 03.11.2020 அன்று இரவு இவர் தனது கடமையை முடித்துக் கொண்டு தனது வீட்டுக்கு திரும்பி கொண்டிருந்தவேளையில் இனம் தெரியாத நபர்களால் கொலை செய்யப்பட்டிருந்தார்.

இவ் கொலை தொடர்பாக ஒருவர் சந்தேகத்தின் நிமித்தம் பொலிசாரால் கைது செய்யப்பட்டு தற்பொழுது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் இவ் கொலை தொடர்பாக மேலும் துப்புத்துலங்கி மன்றுக்கு அறிக்கையிடுமாறு குற்றப்புலணாய்வு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டதுடன் இவ் வழக்கு தொடர்பாக மீட்கப்பட்ட தடயப் பொருட்கள் பகுப்பாய்வுக்கு அனுப்பி வைக்கப்பட்ட நிலையில் இவ் வழக்கு விசாரனை மீண்டும் புதன் கிழமை (17.02.2021) அன்று மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா முன்னிலையில் விசாரனைக்கு எடுக்கப்பட்டது.

இவ் வழக்கு தொடர்பாக கொழும்பிலிருந்து வருகை தந்திருந்த குற்ற புலணாய்வு திணைக்களத்திலிருந்து ஒரு அதிகாரியும் சந்தேக நபர் சார்பில் சட்டத்தரனி எஸ்.டினேஸ் மற்றும் பாதிப்படைந்தவர்கள் சார்பாக சட்டத்தரனி பா.டெனிஸ்வரன் மன்றில் முன்னிலையாகி இருந்தனர்.

இவ் கொலை தொடர்பாக கண்டுபிடிக்கப்பட்ட தடயப் பொருட்கள் பகுப்பாய்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளபோதும் அவைகளுக்கான அறிக்கைகள் இன்னும் கிடைக்கப் பெறவில்லையென மன்றில் தெரிவிக்கப்பட்டது.

இவ் சான்று பொருட்களின் பகுப்பாய்வு அறிக்கையை கூடியளவு விரைவில் மன்றில் முன்னிலைப் படுத்த தக்க நடவடிக்கையை மேற்கொள்ளும்படி கட்டளை பிறப்பிக்கும்படி சட்டத்தரனி எஸ்.டினேஸ் மன்றில் தனது விண்ணப்பத்தை நீதமன்றில் முன்வைத்தார்.

இதைத் தொடர்ந்து எதிர்வரும் 03.03.2021 வரை இவ் வழக்கை மீண்டும் நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜட ஒத்திவைத்துள்ளதுடன் சந்தேக நபரை தொடர்ந்து விளக்க மறியலிலும் வைக்க கட்டளை பிறப்பித்தார்.

கொரோனா காரணமாக சந்தேக நபர் இவ் வழக்கின்போது சிறை அதிகாரிகளால் மன்றில் முன்னிலைப்படுத்தவில்லை. என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மூதூர் பிரதேசத்தில் மிகவும் பின்தங்கிய கிராமங்களின் அபிவிருத்தியில் அரசாங்க அதிபர் அக்கறை



(பொன்ஆனந்தம்)

திருகோணமலை மூதூர் பிரதேசத்தில் மிகவும் பின்தங்கிய கிராமங்களின் அபிவிருத்தியில் மாவட்ட செயலாளர் மிகவும் கவனம் செலுத்துகிறார் என மூதூர் பிரதேச செயலாளர் எம். பி. எம். முபாரக் தெரிவித்தார்

இவ்வருடம் மூதூர் பிரதேச த்திற்கு 12மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் 50வீதமான நிதி மிகவும் பின்தங்கிய பிரதேசமான நல்லாலூர் வீரமாநகர், பாட்டாளிபுரம் போன்ற கிராம அபிவிருத்திக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.இவ்வாறு இப்பகுதியில் உள்ள பிரச்சனைகள் படிப்படியாக தீர்க்கப்படும் எனவே இவ்வாறான சந்தர்ப்பங்களை பொதுமக்கள் முறையாக பயன்படுத்த வேண்டும்

. இப்பிரதேசங்களின் அபிவிருத்தியில் மாவட்ட செயலாளர் கூடிய அக்கறை எடுத்து செயற்படுகின்றார் எமது அதிகாரி களும் தமது பூரண பங்களிப்பை அளித்து செயற்படுகின்றனர் எனவும் சுட்டிக்காட்டினார்.

# பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

(இ.சுதாகரன்)

உணர்வுள்ள உறவுகள் அமைப்பினால் மட்டு மாவட்டத்தின் மேற்கு கல்வி வலயத்திலுள்ள பட்டிப்பளை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களுக்கு பெறுமதியான கற்றல்உபகரணங்கள் இன்று வியாழக்கிழமை வழங்கி வைக்கப்பட்டன.

உணர்வுள்ள உறவுகள் அமைப்பிற்கு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக குறித்த கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. நிகழ்வில் உணர்வுள்ள உறவுகள் அமைப்பின் பிரதி நிதிகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது







# கிழக்கில் 246 தொற்றாளர்களே 8 வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுகின்றனர்

( வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கு மாகாணத்தில் தற்போது 246 பேரே எட்டு வைத்தியசாலைகளில் கொரோனாச் சிகிச்சையில் உள்ளனர். கொரோனாத் தொற்றுக்களின் எண்ணிக்கை 2750ஐ தாண்டியுள்ளது. அங்கு நேற்றையதினம் (18) வியாழக்கிழமை 2788 ஆகியது. அதேவேளை கல்முனைப் பிராந்தியம் 1345 ஆக உயர்ந்தது.

கடந்த மார்ச் மாதமிருந்து பேலியகொட மூலமாக இதுவரை கல்முனை பிராந்தியத்தில் 1345 பேரும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 659 பேரும் திருமலை மாவட்டத்தில் 528 பேரும் அம்பாறை பிராந்தியத்தில் 233 பேருமாக 2765 பேர் தொற்றுக்கிலக்காகியுள்ளனர். மேலும் வெளிநாடு மினுவாங்கொட கந்தக்காடு கொத்தணி வெலிசற கடற்படைமுகாம் போன்ற மூலங்களிலிருந்து மீதி 23 தொற்றுக்கள் இனங்காணப்பட்டுள்ளன.

இதுவரை கிழக்கிலுள்ள 08 கொரோனா வைத்தியசாலைகளில் 4137 தொற்றாளர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தனர். அவர்களில் 3872 பேர் குணமாகி வீடு சென்றுள்ளனர். தற்போது ஆக 246 பேரே எட்டு வைத்தியசாலைகளிலும் உள்ளனர். அங்கு 600 கட்டில்கள் காலியாகவுள்ளன.

இது இவ்வாறிருக்க 28263 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ள அதேவேளை 64190 பேர் அன்ரிஜன் பிசிஆர் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

இத்தரவுகளை கிழக்குமாகாண சுகாதாரத்திணைக்களம் வெளியிட்டுள்ளது.



மூதூர் பிரதேச செயலகத்தில் வியாழக்கிழமை நடை பெற்ற நடமாடும் சேவையில் அதிகளவிலான மக்கள் கலந்து கொண்டனர். (படங்கள்: பொன்ஆனந்தம்)

# ஈழத்தின் புகழ் பூத்த பாடகர் சாந்தனுக்கு மாங்குளத்தில் சிலை

## புதுக்குடியிருப்பு பிரதேச சபையில் பிரேரனை நிறைவேற்றம்



(சண்முகம் தவசீலன்)

ஈழத்தின் புகழ் பூத்த பாடகர் எஸ். ஜி. சாந்தன் அவர்களுக்கு மாங்குளத்தில் சிலை அமைக்க புதுக்குடியிருப்பு பிரதேச சபையில் பிரேரனை நிறைவேற்றம்

சண்முகம் தவசீலன்

ஈழத்தின் புகழ் பூத்த பாடகரும் உலகத்தமிழ் உறவுகள் அனைவரின் உள்ளங்களிலும் நீங்காத இடம்பிடித்த எஸ் ஜி சாந்தன் அவர்களுக்கு மாங்குளத்தில் சிலை அமைக்க புதுக்குடியிருப்பு பிரதேச சபையில் ஏகமனதாக பிரேரனை நிறைவேற்றப்பட்டுள்ளது

கடந்த 11.02.2021 அன்று புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் இவ்வாண்டுக்கான இரண்டாவது சபை அமர்வு புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளர் ஆ.தவக்குமார் தலைமையில் இடம்பெற்றது

இதன் போது புதுக்குடியிருப்பு பிரதேசசபை உறுப்பினர் முத்துசாமி முகுந்தகஜன் அவர்களால் குறித்த பிரேரனை சபையில் கொண்டு வரப்பட்டது

இதனை தொடர்ந்து பல்வேறு வாதப்பிரதிவாதங்களை தொடர்ந்து குறித்த பிரேரனை சபையில் நிறைவேற்றப் பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் சுற்றுச்சூழல் வாழ்வசதி குழுவினால் குறித்த மாங்குளம் நகர்ப் பகுதியில் பிரேரனை கொண்டுவந்த உறுப்பினர் அவர்களால் அடையாளப்படுத்தப்பட்ட மூன்று இடங்களில் பொருத்தமான இடத்தை தொரிவுசெய்து அந்த இடத்தில் சிலை அமைப்பது என தீர்மானிக்கப்பட்டது

குறித்த பிரேரனை கொண்டுவந்த உறுப்பினர் முத்துசாமி முகுந்தகஜன் அவர்கள் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் எமது மாங்குளம் மண்ணில் இறுதிவரை வாழ்ந்து தனது இசையால் அனைவரையும் கொள்ளைகொண்ட மனிதருக்கு சிலை அமைக்க பிரேரனை நிறைவேற்றப் பட்டுள்ளது

அத்தோடு எதிர்வரும் 26.02.2021 அன்று அவருடைய நினைவு தினம் வருடந்தோறும் இந்த நினைவு தினத்தை பிரதேச சபை ஊடக அனுஸ்ரிப்பதற்கு கோரிக்கை விடுத்தேன் அதற்கமைய எமது ஆளுகைக்கு உட்பட்ட சனசமூக நிலையம் ஊடக நிகழ்வு செய்வதற்கு ஏற்ப்பாடு செய்யப் படுகிறது

அந்த வகையில் எதிர்வரும் 26 ஆம் திகதி அவரது உயிர் பிரிந்த நேரமாகிய 2.31 மணிக்கு மாங்குளம் பிரதேச சபை கட்டிட மண்டபத்தில் நினைவேந்தல் நிகழ்வு இடம் பெறும் எனவும் தெரிவித்தார்

# திருமலையில் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்



(பொன்ஆனந்தம் )

திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரிவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் டெங்கு நுளம்பு பரிசோதனை நடவடிக்கைகள் துரிதப்படுத்த ப்பட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.


சில இடங்களில் டெங்கு குடம்பிகள் காணப்பட்டதுடன் பாதிப்பும் அறிக்கையிடப்பட்டிருந்தன. இந்நிலையில் கடந்த மூன்று நாட்களாக பூம்புகார், பாலையூற்று , இலிங்கநகர் கிராமங்களில் 1396 வீடுகளில் டெங்கு பரிசோதனையை மேற் கொண்டு ள்ளதுடன் தொடர்ந்து மட்கோ பகுதியிலும் இப்பரிசோதனயை சுகாதார வைத்திய குளுவினர் மேற்கொண்டனர்.

இவ்விடயத்தில் பொதுமக்கள் அலட்சியமாக இருக்கக்கூடாது என அதிகாரிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

# மன்னாரில் 128 குளங்கள் அபிவிருத்திக்கு தெரிவு

## காதர் மஸ்தான் எம்.பி.





( வாஸ் கூஞ்ஞ)

ஐயாயிரம் குளங்களுக்கான வேலைத் திட்டத்தில் மன்னார் மாவட்டத்துக்கு 128 குளங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இவைகள் நிறைவேற்றப்பட்டதுடன் இங்கு மேலும் குளங்களுக்கான நிதிகள் விடுவிக்கப் பட இருப்பதாக எமக்கு உறுதியளிக்கப்பட்டுள்ளது என வன்னி பாராளுமன்ற உறுப்பினரும் மன்னார் முல்லைத்தீவு ஒருங்கணைப்பு குழு இணைத் தலைவருமான காதர் மஸ்தான் இவ்வாறு தெரிவித்தார்.

நாம் முன்பு நடாத்தப்பட்ட பிரதேச செயலக கூட்டங்களில் பல விடயங்களை ஆராய்ந்திருக்கின்றோம். அந்த நேரத்தில் வரவு செலவு திட்டங்கள் மேற்கொள்ளப் படாமையால் நாம் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களை அந்நேரத்தில் முன்னெடுத்துச் செல்ல முடியவில்லை.

ஆனால் தற்பொழுது எமது ஜனாதிபதி மற்றும் பிரதமர் இவர்களின் தலைமையிலுள்ள எமது அரசானது எமக்கு நிதிகளை ஒதுக்கீடு செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

இதற்கு முன்னோடியாக நாம் மேற்கொள்ள இருக்கும் அபிவிருத்தி திட்டங்களை முன்னுரிமைப்படுத்தி அடையாளம் காணும்படி வேண்டப்பட்டுள்ளோம்.

அத்துடன் சில வேலை திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளதுடன் எமது மன்னார் மாவட்டத்துக்கு குறைந்த கல்வியுடையோருக்கான வேலை வாய்ப்பில் 1200 பேருக்கு வேலை வாய்ப்பு வழங்குவதற்கான ஒதுக்கீடுகளும் வழங்கப்பட்டுள்ளன.

இதில் ஏற்கனவே ஒரு பகுதினருக்கான இவ் வேலை வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் ஒரு லட்சம் கிலோ மீற்றர்களுக்கான கார்பட் உள் வீதிகளுக்கான வேலைத் திட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் மன்னார் மாவட்டத்தில் 58 கிலோ மீற்றருக்கான வீதிகளுக்கான திட்டங்கள் அடையாளம் காணப்பட்டு அவைகள் அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இத்துடன் ஐயாயிரம் குளங்களுக்கான வேலைத் திட்டத்தில் மன்னார் மாவட்டத்துக்கு 128 குளங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இவைகள் நிறைவேற்றப்பட்டதுடன் இங்கு மேலும் குளங்களுக்கான நிதிகள் விடுவிக்கப்பட இருப்பதாக எமக்கு உறுதியளிக்கப்பட்டுள்ளது.

மேலும் உட்கட்டமைப்பு வேலைத் திட்டங்களுக்காக நாம் முக்கிய வேலைத் திட்டங்களை அடையாளப் படுத்தி வருகின்றோம். அதற்காக நாம் முக்கியமாக கிராம மக்கள் மூலம் அவர்களுக்கான திட்டங்களை அடையாளப்படுத்தும் நோக்குடன் இவ்வாறான அமர்வுகள் பலன் அளிக்கும் என நம்புகின்றேன்.

ஆகவே எதிர்காலத்தில் ஒவ்வொரு கிராம மக்களும் பயண்படக்கூடிய வேலைத் திட்டங்களாக அமைய நாம் சரியான தீர்மானத்தை எடுத்துக் கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கின்றேன் என்றார்.

-மன்னார் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த செவ்வாய் கிழமை (16.02.2021) மன்னார் பிரதேச செயலாளர் பிரதீப்பின் ஒழுங்கமைப்பின் கீழ் மன்னார், முல்லைத்தீவு ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தின் இணைத் தலைவரான காதர் மஸ்தான் தலைமையில் மன்னார் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றபோது வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனும் இதில் கலந்து கொண்டார்.

இவ் கூட்ட ஆரம்பத்தில் இவ் கூட்ட ஒழுங்கமைப்பாளர் மன்னார் பிரதேச செயலாளர் பிரதீப் கருத்து தெரிவிக்கையில்;

தற்பொழுது இருந்துவரும் கொரோனா காரணமாக சமூக இடைவெளியை பின்பற்ற வேண்டிய காரணத்தினாலும் சில மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலேயே இவ் கூட்டத்தை நடாத்த வேண்டியுள்ளது.

இதன் அடிப்படையில் மன்னார் பிரதேச சபை மற்றும் நகரசபையின் சார்பாக கட்சிகளின் பிரநிதிப்படுத்தும் நோக்குடன் தலா ஒருவரையும் ஏனைய திணைக்களங்கள் சார்பில் மிகவும் முக்கியமானவர்களை மட்டும் சமூக மட்டங்களில் ஒவ்வொரு கிராம அலுவலகர்கள் பிரிவிலும் எல்லா அமைப்புக்களின் சார்பில் தலா ஒருவரையே நாம் இங்கு அழைத்திருக்கின் றோம் என்றார்.

சுபீட்சம்
நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
கிழக்குச் சூரியன்
19 FEBRUARY 2021, FRIDAY

# பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானின் பாராளுமன்ற உரை ரத்து செய்யப்பட்டது ஏமாற்றமாக உள்ளது!

## – எச்.எம்.எம். ஹரீஸ்!

(நூருல் ஹுதா உமர்)

எதிர்வரும் திங்கட்கிழமை இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ள எண்ணியுள்ள பாகிஸ்தானிய பிரதமர் இம்ரான்கானின் விஜயத்தின் போது இலங்கை பாராளுமன்றத்தில் உரையாற்றவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்த சூழ்நிலையில் திடீரென அவரது பாராளுமன்ற உரை ரத்து செய்யப்பட்டது ஜனநாயகத்தின் மீது கொண்ட நம்பிக்கைக்கு எதிரான செயலாகவே பார்க்கமுடிகிறது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் பிரதித்தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள விசேட ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ள விடயங்களாக, இம்ரான்கானின் இலங்கை



பாராளுமன்ற விசேட உரையில் அவர் எந்த விடயங்களை பேசப்போகிறார் என இலங்கை மக்கள் மட்டுமில்லாது சர்வதேசமே உன்னிப்பாக நோக்கிக் கொண்டிருந்த இந்த சூழ்நிலையில் அவரின் உரை ரத்து செய்யப்பட்ட செய்தி வெளியாகியுள்ளமை பலத்த ஏமாற்றத்தையும் கவலையையும் தோற்றுவித்துள்ளது. இலங்கையின் நட்பு நாடுகளில் முதன்மையான சர்வதேச ஒற்றுமையை வலியுறுத்தி தனது அரசியலை முன்னெடுக்கும் பாகிஸ்தானிய பிரதமருக்கு இவ்வாறான தர்மசங்கட நிலையை உருவாக்கி அவமானத்தை உண்டாக்கியுள்ள இந்த செயற்பாடானது இலங்கை அரசாங்க ராஜதந்திர போக்கின் தொய்வு நிலையை காட்டுகிறது.

ஜனநாயக வலிமை, நீதி, நியாயத்தை வலியுறுத்தல் உட்பட இலங்கையின் பல்லின மக்களின் பிரச்சினைகளை இலங்கை பாராளுமன்றத்தில் பேசி இலங்கை அரசாங்கத்துக்கு வேண்டுகோளை முன்வைப்பார் என இலங்கை சிறுபான்மை மக்கள் மத்தியில் நம்பிக்கை பரவியிருந்த நிலையிலையே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. இவ்விடயம் தொடர்பில் இலங்கை அரசாங்கமும், சபாநாயகரும் மீள் ஆலோசனை செய்து பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானின் இலங்கை பாராளுமன்ற விசேட உரையை உறுதிப்படுத்த முன்வர வேண்டும். என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கான வாய்ச் சுகாதார விழிப்புணர்வு!



(பாறுக் ஷிஹான்)

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான சுகாதார மேம்பாடு தொடர்பான விழிப்புணர்வு ஒன்று நாவிதன்வெளி பிரதேச செயலக கலாசார மத்திய நிலையத்தில் புதன்கிழமை இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் குணசிங்கம் சுகுணனின் ஆலோசனைக்கமைய வாய்ச்சுகாதார பிரிவினரால் இவ்விழிப்புணர்வு பிராந்திய பல் வைத்திய நிபுணர் எம்.ஐ.எம்.ஹபீல் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது குறித்த நிகழ்வினை நாவிதன்வெளி பிரதேச செயலாளர் எஸ் ரங்கநாதன் ஆரம்பித்து வைத்தார்.

மேலும் தொடர்பான ஆலோசனைகளையும் ;பற்சுகாதாரம் வாய்ச் சுகாதாரம் தொடர்பில் முன்பள்ளி ஆசிரியர்களக்கு பற்சிகிச்சையாளர்களான எல்.ஜெஸ்மின் எஸ். விதயாசினி உள்ளிட்ட பலர் தெளிவு படுத்தியதுடன் ஆலோசனைகளை வழங்கி வைத்தனர்.

மேலும் நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின முன்பிள்ளை பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆ.ரஜிப்கான் உள்ளிட்ட உத்தியோகத்தர்களும் இந்நிகழ்வில் இணைந்திருந்தனர்.

# நிந்தவூர், அட்டப்பள்ளம் பிரதேசம் பாரிய கடல் அலையினால் காவு கொள்ளப்பட்டுள்ளது



(எம்.ஐ.எம். அஸ்ஹர்)

அண்மையக்காலமாக அம்பாறை மாவட்டத்தின் கிழக்கு கடல் பரப்பில் அடிக்கடி ஏற்படும் கடல் கொந்தளிப்பால் ஏற்படும் பாரிய அலைகள் கரையை நோக்கி வருவதனால் தினசரி நிந்தவூர், அட்டப்பள்ளம் கடற்கரை பிரதேசம் காவு கொள்ளப்படுவதனால் மீனவர்களும் சுற்றயல் பிரதேச குடியிருப்பாளர்களும் சொல்லொனா துயரங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

கடற்கரைப் பிரதேசத்திலுள்ள பயன்தரும் தென்னை மரங்கள் கடலரிப்பினால் தரையில் வீழ்ந்து காணப்படுவதுடன் அவற்றின் வேர்களும் தரைக்கு மேலாக வெளிவந்தும் உள்ளது. இதனால் தென்னம் தோட்டங்களை பராமரித்து வருவோர் பெரும் நஸ்டத்தை எதிர்நோக்கி வருவதுடன் மீனவர்கள் தாம் ஒய்வு எடுப்பதற்கும், தமது தோணி, படகு, மீன்பிடி வலை என்பவற்றை திருத்துவதற்காக பயன்படுத்தும் இயற்கையான நிழலும் இல்லாமல் போயுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

நிந்தவூர், அட்டப்பள்ளம் கடற்கரை பிரதேச மீனவர்கள் தமது தோணி மற்றும் படகுகளையும் நிறுத்தி வைப்பதற்கு தற்போது போதிய இடவசதியும், தமது மீன்பிடி உபகரணங்களை பாதுகாத்து வைப்பதற்கான மீன்வாடிகளும் இல்லாமலிருப்பது தமக்கு பெரும் கவலையளிப்பதாகவும், இந்த நிலமை ஏற்படுவதற்கு ஒலுவிலில் அமைக்கப்பட்டுள்ள மீன்பிடி துறைமுகமும் ஒரு காரணமாகும் என பிரதேச மீனவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இதே வேளை நிந்தவூர் பிரதேச சபையினால் பொது மக்கள் ஒய்வை கழிப்பதற்காக கடற்கரையோர தென்னந்தோப்பு பிரதேசங்களில் கொங்கிரீட் கதிரைகள் போடப்பட்டுள்ளதுடன் கடலரிப்பை தடுப்பதற்கான தடுப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறாக தொடர்ச்சியாக கடலலையினால் நிந்தவூர் மற்றும் அட்டப்பள்ளம் கடற்கரை பிரதேசம் காவு கொள்ளப்பட்டு போகுமேயானால் எதிர்காலத்தல் இப்பிரதேசத்தில் கடற்கரையொன்று முழுமையாக இல்லாமல் போனலும் போகலாம் என்ற அச்சம் இப்பிரதேச மக்களிடையே அதிகரித்துள்ளது.

உண்மைச் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள
WWW.SUPEEDSAM.COM

# கல்முனை சமுர்த்தி வங்கியில் ஒன்லைன் கொடுக்கல் வாங்கல் சேவை ஆரம்பம்



(எம்.என்.எம்.அப்ராஸ்)

கல்முனை பிரதேச செயலகப்பிரிவின் கீழ் வரும் கல்முனைக்குடி சமுர்த்தி வங்கியானது நேற்று (17) மக்களுக்கான நாளாந்த கொடுக்கல்,வாங்கல் நடவடிக்கைகளை ஒன்லைன் (Online) செயற்பாட்டினூ டாக ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு வங்கியின் உதவி முகாமையாளர் எம்.ஐ.எம்.முஜீப் அவர்களின் நெறிப்படுத்தலிலும், வங்கியின் முகாமையாளர் மோகூஷஸ் புவிராஜ் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனைப் பிரதேச செயலக சிரேஷ்ட தலைமை முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சாலிஹ் அவர்கள் கலந்துகொண்டதுடன் மேலும் வலய உதவிமுகாமையாளர், வங்கியின் பணிக்குழுவினர்கள் கட்டுப்பாட்டுச்சபைத் தலைவர் கலாபூஷணம் ஐ.எல்.நெய்னா முகம்மட் உட்பட உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

# அக்கரைப்பற்று பிரதேச சபையில் பிரியாவிடை நிகழ்வும், பரிசளிப்பும்





(நூருல் ஹுதா உமர்)

அக்கரைப்பற்று பிரதேசசபை உத்தியோகத்தர்களின் நலன்புரி அமைப்பு ஏற்பாடு செய்த பிரியாவிடை நிகழ்வும், புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய உத்தியோகத்தர்களின் குழந்தைகளுக்கு பரிசளிக்கும் நிகழ்வும். அக்கரைப்பற்று பிரதேசசபை தவிசாளர் எம் ஏ றாசிக் தலைமையில் வியாழக்கிழமை இடம்பெற்றது

நீண்டகாலமாக பிரதேச சபையில் கடமை புரிந்து வேறு காரியாலயங்களுக்கு இட மாற்றம் பெற்றுச் செல்லும் இரு உத்தியோகத்தர்களை கௌரவிக்கும் விதமாக நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. இதில் அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளராக இருந்த அக்கறைப்பற்று பிரதேச சபையின் வருமான வரி பரிசோதகர் எம் எஸ் ஜாபர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ நிஹாறா ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

மேலும் அக்கரைப்பற்று பிரதேசசபையின் செயலாளர் எல் இர்பானின் புதல்வி மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் என் ஐ எஸ் நிஸ்தார் (விரிவுரையாளர்) மற்றும் திருமதி பீ ஏ எச் ஏ நிஸ்பா அவர்களின் புதல்விகள் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்ததை முன்னிட்டு அவர்களுக்கு தவிசாளர், உதவித் தவிசாளர், உறுப்பினர்கள் பரிசுகள் வழங்கி பாராட்டினர். இந் நிகழ்வில் உதவித் தவிசாளர், பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேச சபை செயலாளர் உட்பட அக்கரைப்பற்று பிரதேச சபையின் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

PHOTO DIGITAL INTERNATIONAL
MASTER PRINTERS
No. 6N, Mosque Lane, Kalmunai.
No. BG6, Maligawatta National House Scheme, Colombo 10.
Best Regional Printer For the Year 2013
Mobile : 077 613 9227 / 075 260 0333 / 075 963 0000 E-mail : mmjesmin06@gmail.com